(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 86 ]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2009, மே 07, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0058 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங் களின் எண்ணிக்கையையும்,

(ii) விஜயம் செய்த நாடுகளையும், மற்றும்

(iii) பயணச்சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றின் செலவு களுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச்செலவை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடன்சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கென ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகவும், அத்துடன்,

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) அப்பயணங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மற்றும்

(ii) அப் பயணங்களுக்கென வழங்கப்பட்ட குறை நிரப்புச் செலவினம் என்பவற் றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1140 / '08

2.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி, – கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கல்வி அமைச்சு செயலாளரின் ஈட / 1 / 12 / 10 / 30 / 1 ஆம் இலக்க 2008.04.24 ஆம் திகதிய கடிதத்தின் மூலமாக " நடவடிக்கை சேவை" பிரிவின் கீழ் தொடர் இலக்கம் 5 S 508 ஐக்கொண்ட ஆதித்யா வினுரி இஹாரா விஜேரத்ன எனும் மாணவியை கொழும்பு 7, சிரிமாவோ பண்டாரநாயக்க மகளிர் வித்தியாலயத்தில் சேர்த்துக்கொள்ளும்படி அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இது சம்பந்தமாக தேசிய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. ஹெட்டிஆரச்சியினால் மேல் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு 2008.02.29 ஆம் திகதியிடப்பட்ட கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதா என்பதையும் ,

(iii) மேற்படி காரணம் சம்பந்தமாக , தங்களது குறிப்பீடுடன் மேற்படி மாணவியை சிரிமாவோ பணடாரநாயக்க வித்தியாலயத்தில் சேர்த்துக் கொள்ளும்படி மாணவியின் தந்தையான திரு. ஐ. ஏ. விஜேரத்னவினால் விடுக்ககப்பட்ட வேண்டுகோள் அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தின் கீழ் அல்லது வேறு அடிப்படையிலாவது மேற்படி மாணவிக்கு இற்றைவரை பாடசாலையொன்று கிடைக்கவில்லை என்பதை அவர் அறிவாரா ?

(இ) மேற்படி மாணவியை சிரிமாவோ பணடாரநாயக்க வித்தியாலயத்திற்கு சேர்த்துக் கொள்ள முடியாமைக்கான காரணத்தை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஈ) அம் மாணவிக்கு பாடசாலையொன்றில் கல்வி கற்பதற்காக உள்ள உரிமையை அவர் ஏற்றுக்கொள்ராரா ?

(உ) ஆமெனில் அவருக்கு பாடசாலையொன்றை பெற்றுத் தர அவர் நடவடிக்கை எடுப்பாரா ?

(ஊ) இன்றேல், ஏன் ?

1159 / '08

3.

கௌரவ ஆர். பி.ஏ ரணவீர பதிரண,— உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) வட மத்திய மாகாணத்தின் அலுவல்களுக்காக நிருமாணிக்கப்படும் அமைச்சுகளுக்கான கட்டிடத் தொகுதியின் நிருமாணப் பணிகள் எந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(ii) நிருமாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்ட நிருவனம் யாதென்பதையும்,

(iii) மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தொகையும்,

(iv) அதில் எவ்வளவு பணத்தொகை செலுத்தப்பட்டதென்பதையும்,

(v) அவ்வாறு செலுத்தப்பட்ட திகதி மற்றும் செலுத்த எஞ்சியிருக்கும் பணத்தொகை யாதென்பதையும்,

(vi) மூலத்திட்டத்திற்மைய இக்கட்டிடம் எத்தனை மாடிகளைக் கொண்ட தென்பதையும்,

(vii) அதன் மொத்த பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(viii) மேற்படி மூலத்திட்டத்திற்கு மேலதிகமாக புதிய மாடியொன்று சேர்க்கப்பட்டதா என்பதையும்,

(ix) ஆமெனில், அதன் பரப்பளவு யாதென்பதையும்,

(x) மேற்படி மாடியை சேர்ப்பதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தின் வேலை ஆரம்பிக்கப்படவிருந்த மற்றும் பூர்த்தியாக்கப் பட விருந்த திகதிகள் யாவையென்பதையும்,

(ii) தற்போதுள்ள நிலைமையின் கீழ் மேற்படி கட்டிடத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படவிருக்கும் திகதி யாதென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1160 / '08

4.

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) சூரியவெவ பிரதேச செயலகப் பிரிவுக்கு குடிநீர் வழங்குகின்ற மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகார பிரதேசத்திற்குற்பட்ட சூரியவெவ வாவிக்கான ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் நீர்த்தேக்கத்தில் இடப்படுகின்ற கழிவுப்பொருட்களின் காரணமாக குடிநீர் பெறும் நீர்த்தேக்கம் அசுத்தாகமாகின்றது என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா ?

(இ) (i) வாவிக்கான ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற குடியிருப் பாளர்களின் பெயர் , முகவரி , குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்கள் அனுமதியின்றி அங்கு குடியிருந்த காலப்பகுதி ஒவ்வொரு குடும்பத்திற்கும் உரியதாக வெவ்வேறாக யாவை என்பதையும்,

(ii) வீரவில விமான நிலையத்தை நிர்மாணிக்கும்போது காணிகளை இழக்கின்றவர்களுக்காக வழங்கப்படவிருந்த மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான காணித்துண்டுகள் உரிய விமான நிலையம் அங்கு நிர்மாணிகப்படாததால் வாவிக்கான ஒதுக்குப்பிரதேசத்தில் உள்ள அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படுமா என்பதையும்,

(iii) இன்றேல், இவர்களுக்கு பாசனக்காணிகளும் மேட்டுக்காணிகளும் வழங்கப்படும் இடம் மற்றும் உரிய பாசனக்காணிகளினதும் மேட்டுக்காணி களினதும் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) நீண்டகாலமாக அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ள சொத்துக்களை அவர்கள் அகற்றப்படும் போது இழக்க நேரிடுவதால், வர்த்தக பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நட்டஈடு செலுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1168 / '08

5.

கௌரவ வஜிர அபேவர்தன,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இம்முறை இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் முழுநேர பாடநெறிகளைப் பயில்வதற்காக விண்ணப்பித்தருந்த 24 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்,

(ii) இவர்களுள் எத்தனை பேருக் முழுநேரப் பாடநெறிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஒருவரிடம் 250/= ரூபா வீதம் அறவிடப்பட்டு, இருப்பினும் வயது அடிப்படையில் பாடநெறிகளுக்காக தெரிவு செய்யப்படாத 24 வயதைக் கடந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து உரிய நிறுவனம் ஈட்டியுள்ள தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1173/ '09

6.

கௌரவ திலகரத்ன விதானாச்சி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) காலி, நாகொடை, பரணதானாயம்கொட கனிஷ்ட வித்தியாலயம் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது,

(ii) மேற்படி பாடசாலைக்குரிய காணியை நன்கொடையாக வழங்கியவர் யார்,

(iii) மேற்படி பாடசாலை மூடப்பட்டு எவ்வளவு காலம் கடந்துள்ளது,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஓர் முன்னாள் ஆளுநரான திரு. எம். எஸ். அமரசிறி உட்பட பெருமளவு கல்விமான்களை நாட்டிற்கு வழங்குவதற்கு இப்பாடாசாலை அடிப்படை யாயிருந்ததென்பதையும்,

(ii) மேற்படி பாடசாலை மூடப்பட்டுள்ளமையால் குறைந்த வருமானம் பெறும் பெற்றோருக்கு, அதிக பணத்தைச் செலவிட்டு பாடசாலை வான் வண்டிகளின் மூலம் அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்ப நேரிட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) கட்டிடங்கள் உள்ளிட்ட வசதிகளைக் கொண்டுள்ள இப்பாடசாலைக்கு தமது பிள்ளைகளை அனுப்பவதற்கு பெற்றோர்கள் தயாராயுள்ளனர் என்பதால், தேவையான ஆசிரியர்களை வழங்கி எவ்வளவு காலத்தில் மேற்படி பாடசாலையை ஆரம்பிக்க அவர் நடவடிக்கை எடுப்பார்?

(ஈ) இன்றேல், ஏன்?

1238/ '09

7.

கௌரவ பேமசிறி மானகே,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) திருகோணமலை – நிலாவெளி ஊடாக வீதியொன்று அமைக்கப்பட்டு வருகின்றதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி வீதியின் நீளம் மற்றும் அகலம் யாது ,

(ii) அவ்வீதி தொடர்பாக மதிப்பிடப்பட்ட பணத்தொகை யாது,

(iii) இதனோடு தொடர்புடைய நிதி வசதிகள் எவ்வாறு கிடைக்கின்றன,

(iv) மேற்படி வீதி எவ்வாறு பெயரிடப்பட்டுள்ளது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0084 / '08

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறை முகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 'மிஹின் எயார்' கூட்டிணைக்கப்பட்ட திகதியினையும்,

(ii) அதன் முதலாவது வர்த்தக விமானம் சென்ற திகதியையும்,

(iii) 'மிஹின் எயார்' ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இற்றைவரையிலான அதன் பணிப்பாளர்களின் பெயர்களையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்பட்ட சம்பளம், மிஹின் விமான சேவையைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு, ஏனைய விமானச் சேவைகளைப் பயன்படுத்த வழங்கப்பட்ட விமானச் சீட்டு மேலும் வழங்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகள் என்பவற்றை ஒவ்வொரு நபர் அடிப்படையிலும் வருட அடிப்படையிலும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கொடுக்கப்பட்ட வேறு ஏதாவது நன்மைகளையும் மேலும் கொடுக்கப்பட வேண்டிய வேறு ஏதாவது நன்மைகளையும்,

(ii) இயக்கப்பட்ட நாளிலிருந்து மாதாந்த தேறிய இலாபத்தையும் மொத்த இலாபத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1170 / '09

9.

கௌரவ விஜித ரணவீர,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வருடாந்தம் வழங்கப்பட்டுள்ள புதிய தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) 2008 ஆம் ஆண்டு இறுதியில் இம்மாவட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்த தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 16 வயதைப் பூர்த்தி செய்திருந்த போதிலும் மாவட்டத்தில் இதுவரை தேசிய அடையாள அட்டை பெறாதுள்ளவர்கள் உள்ளனரா,

(ii) ஒவ்வொரு பிரதேச செயலாளர் மட்டத்திலும் இவ்வெண்ணிக்கை எவ்வளவு,

(iii) இவர்கள் தேசிய அடையாள அட்டை பெற முடியாதுள்ளமைக்கான தடைகள் யாவை,

(iv) மேற்படி தடைகளைத் நீக்கி அடையாள அட்டைகள் இல்லாதோருக்கு அடையாள அட்டைகளை வழங்குவதற்கு உரிய அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கனணிமயப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை (e-NIC) வழங்குதல் எப்போது ஆரம்பிக்கப்படும்,

(ii) மேற்படி அடையாள அட்டையொன்றை (e-NIC) பெறுவதற்கு ஒரு பிரசைக்கு ஏற்படக்கூடிய செலவு எவ்வளவு,

(iii) திணைக்கள அலுவல்களை பிரதேச செயலகங்கள் வரை பன்முகப் படுத்துதலின் முன்னேற்றம் யாது,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ,ஏன்?

1202 / '09

10.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரன,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2008 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு இலங்கையில் பதிவுசெய்யப்பட் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி வாகனங்களில் டீசல் வாகனங்கள் மற்றும் பெற்றோல் வாகனங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு,

(iii) பதிவு செய்யப்பட்டுள்ள பெற்றோல் வாகனங்களில் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய வாகனங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மொத்த பெற்றோல் விற்பனையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கு எத்தனை நூற்றுவீதம் விற்பனை செய்யப்படுகின்றது என்பதை தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) பெற்றோல் விலை தொடர்ச்சியாக டீசல் விலையை விட அதிக பெறுமானத்தைக் கொண்டிருப்பதன் காரணமாக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்கின்ற பயணிகள் கடும் அசௌகரியத்திற்கு உள்ளாகின்றனர் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1239 / '09

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் 2000 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு,

(ii) நட்டமடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி நட்டத்தை இலாபமாக மாற்றும்பொருட்டு ஏற்கெனவே மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0874 / '08

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) குருநாகல் மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட மதுபான விற்பனை நிலையங்கள், வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையங்கள், சாராயக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல் களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் குருநாகல் மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1171 / '09

13.

கௌரவ விஜித ரணவீர,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 1230000/= ரூபா சந்தைப் பெறுமதியுடையதும் 2000 ஆம் ஆண்டு உற்பத்திச் செய்யப்பட்டதுமான 227-5808 தண்ணீர் பவுசர் அம்பாந்தோட்டை பிரதேச சபைக்குச் சொந்தமானதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சுனாமி பேரழிவுக்குள்ளாகி பழுதடைந்திருந்த மேற்படி தண்ணீர் பவுசரைத் திருத்துவதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இந்த பவுசரைத் திருத்தும்போது சம்பந்தப்பட்ட பிரதேச சபையின் தலைவர் பொருளாதார நன்மை, வாகனத்தின் சேவைக்காலம் மற்றும் நிலைமை போன்றவற்றை கருத்திற்கொண்டு நடவடிக்கை மேற்கொண்டுள்ளாரா என்பதையும்,

(iii) பொது நிதியை சிக்கனமாகவும் வினைத்திறன்மிக்க வகையிலும் ஈடுபடுத்த குறிப்பிட்ட தலைவர் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி விடயம் தொடர்பாக முறையான விசாரணை நடத்தப்பட்டிருக்குமாயின் உரிய விசாரணை அறிக்கைகளை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) மேற்படி விடயம் தொடர்பாக நடைமுறைச் சட்டத்திற்கு முரணாக செயற்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை யென்பதையும்,

(ii) குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் யாவையென்பதையும்,

(iii) தவறான முறையில் கையாளப்பட்ட பணத்தை மீண்டும் பிரதேச சபைக்கு அறவிட்டுக்கொள்ளவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1203/ '09

14.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரண,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—(1)

(அ) படை வீரர்களுக்காக 50,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) மேற்படி படை வீரர்களுக்கான வீடுகளை நிர்மாணித்தல் எப்போது ஆரம்பிக்கப்பட்டது,

(ii) மேற்படி வீடுகளை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் எந்த இடத்தில் எத்தனை வீடுகளில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன,

(iii) வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது,

(iv) படை வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது

ஆகிய விபரங்களை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) இக்கருத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை யாது :

(ii) செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) படைவீரர்களுக்கான வீடுகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம் மிகவும் மந்தகதியிலேயே இயங்கிவருகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

1257 / '09

15.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில் , நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டில் கடற்றொழில் துறைமுகங்கள் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளனவா என்பதையும்,

(ii) ஆமெனில் , அவ்விடங்களும், அத்திகளும் யாவையென்பதையும்,

(iii) அடிக்கல் நாட்டப்பட்ட இடங்களில் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்,

(iv) ஆமெனில், அது எவ்விடத்தில் என்பதையும்,

(v) மேற்படி அமைப்புப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்,

(vi) மேற்படி அமைப்புப் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் எவ்வாறான தென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு, (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2008.06.05 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்று சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2), — இப் பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும்போது 2009 மே மாதம் 19 ஆம் திகதி செவ்வாய்கிழமை மு. ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்படுமாக.

3.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,- சிறப்புரிமை (இல. 1),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008 நவம்பர் மாதம் 04 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

4.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,- சிறப்புரிமை (இல. 2),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ தயாசிறி ஜயசேக்கர, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2009 சனவரி மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

5.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,- சிறப்புரிமை (இல. 3),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பாலித ரங்கே பண்டார, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008 திசம்பர் மாதம் 05 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

6.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,- சிறப்புரிமை (இல. 4),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ச. சந்திரநேரு, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008 செம்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

7.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,- சிறப்புரிமை (இல.5),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஜயலத் ஜயவர்தன, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008 ஜூலை மாதம் 08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

8.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,- சிறப்புரிமை (இல. 6),— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (கலாநிதி) ஜயலத் ஜயவர்தன, தனது சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக 2008 ஜூன் மாதம் 20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 127 ஆம் ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

இலங்கை நிலவடிவமைப்புக் கலைஞர்கள் நிறுவகச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*2.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— மண் பேணல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் ,— (450 ஆம் அத்தியாயமான) மண் பேணல் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு அச்சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவதற்காக 2009.04.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*3.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— மண் பேணல் சட்டத்தின் கீழ் கட்டளை ,— (450 ஆம் அத்தியாயம்) மண் பேணல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2008 மே மாதம் 22 ஆம் திகதிய 1550/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*4.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் (2) ஆம் உபபிரிவின் (ஏ) மற்றும் (ஐ) ஆம் பந்திகளின் கீழ் கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதிய 1588/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*6.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

வாழ்க்கைத் தொழில்சார் தற்காப்பு மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய நிறுவகம் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*12.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*13.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*14.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*18.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப் படுத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென இப்பாராளுமன்றத்தி னால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் மேன்மை தங்கிய சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*23.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*24.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

25.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

ஸ்ரீ பாத கல்பவருக்ஷ் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

பிரேமதாச கேகொட மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

29.

சமோதா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

30.

கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

31.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

32.

இலங்கை கட்டமைப்புசார் எந்திரவியலாளர் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் - பரிசீலனை

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0875 / '08

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) காலி மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) காலி மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் காலி மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0876 / '08

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) மாத்தறை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் மாத்தறை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0877 / '08

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை யினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0878 / '08

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப்பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் பொலன்னறுவை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0879 / '08

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) அநுராதபுரம் மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் அநுராதபுரம் மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0880 / ' 08

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) களுத்துறை மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் களுத்துறை மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0881/ '08

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கம்பஹா மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) கம்பஹா மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் கம்பஹா மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0882 / '08

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) கொழும்பு மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கையினை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) கொழும்பு மாவட்டத்தில் 2004 ஆம் ஆண்டு ஏப்பிறல் 01 ஆம் திகதி முதல் இற்றைவரையில் புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு திறந்துவைக்கப் பட்ட வைன் கடைகள், வெளிநாட்டு மதுபானக் கடைகள், உணவு விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் எண்ணிக்கையினையும்,

(ii) அவற்றிலிருந்து 2004 முதல் 2007 ஆம் ஆண்டு வரையிலும் இற்றைவரையும் ஒவ்வொரு வருட முடிவிலும் உள்ளவாறாக கிடைத்த வருமானத்துடன் அவற்றின் பெயர்களை தேர்தல் தொகுதி அடிப்படையில்,

(iii) மேலே (i) இலுள்ள தகவலை 1998 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 இல் உள்ளவாறாகவும் கொழும்பு மாவட்டத்திற்கான மொத்த வருமானத்தினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?